சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | அன்புச்செல்வம் |
| தந்தை பெயர் | : | வீரையன் |
| கிராமம் | : | எண்கண் |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | சென்ட்ரிங் வேலை |
| வயது | : | 28 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். ஆஜர் எதிரியை தெரியாது. நான் இப்போதுதான் பார்த்தேன். இதற்கு முன்பு நான் எங்கேயும் பார்த்ததில்லை.

கடந்த 3 லிருந்து 4 மாதங்களுக்கு முன்பாக திருவாரூரில் வேலை செய்து விட்டு எனது சொந்த ஊரான எண்கணுக்கு பேருந்தில் சென்றேன். எனது சொந்த ஊரான முகந்தனூர் பஸ் ஸ்டாப்பிலிருந்து இறங்கி கடைக்கு சென்று சாமான்கள் வாங்கினேன். அப்போது பறப்பயலுக்கெல்லாம் என்ன அவசரம், என சொல்லி, சோடா பாட்டிலை எடுத்து எதிரி சாந்தகுமார் என்பவர் அடித்து விட்டார். நான் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டேன். அதன்பின்னர் கட்டையை எடுத்து என்னை அடித்து விட்டார். அதன்பின்னர் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் ஆம்புலன்சுக்கு போன் செய்து, திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு போலீசார் வந்து, என்னை விசாரணை செய்தார்கள். நடந்ததை சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை அடித்ததாக சொல்லப்படும் கட்டை விறகு கட்டை. என்னிடம் காட்டப்படும் கட்டை என்னை தாக்க பயன்படுத்திய கட்டை அல்ல. என்னிடம் காட்டப்படும் உடைந்த பாட்டில்தான், என்னை அடித்ததால் உடைந்த பாட்டில் ஆகும். அந்த பாட்டில் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கொரடாச்சேரி போலீசார் என்னை விசாரித்தார்கள். விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது என்று சொன்னால் கொரடாச்சேரி போலீசார் எழுதினார்கள். அந்த போலீசாரின் பெயர் எனக்கு தெரியாது. நான் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகாரில் சாட்சிகள் சண்முகசுந்தரம், அய்யப்பன் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் நான் நகல் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சென்றதாக சொல்லப்படும் மளிகை கடையில் கூட்டமாக இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். நான் காயம்பட்டதாக சொல்லும் நேரத்தில், இரத்தம்

என்னுடைய ஆடைகளில் இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த ஆடைகளை போலீசார் வாங்கி கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி யார் என்றே தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் கூட்டமாக இருந்தது என்றாலும், யார் என்னை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் எதிரிமீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னாலும், போலீசார் எழுதிக்கொண்ட புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எதிரி தன்னை சாதி பெயரை சொல்லி திட்டவும் இல்லை, சோடா பாட்டிலால் அடிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.1 பாட்டில் நீதிமன்றத்தில் முதன்முதலாக பார்க்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.02 15:50:18 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.